பக்கங்கள்: 10

காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 01 சனிக்கிழமை 17.07.2021 கதிர் 120

## தனிமைப்படுத்தலிலிருந்து சில பிரதேசங்கள் விடுவிப்பு

கொரோனாவால் முடக்கப்பட்டிருந்த மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த 5 கிராம சேகவர் பிரிவுகள் இன்று அதிகாலை 6 மணி முதல் விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ☞ 2

# யாழில் விக்கி அணியினருடன் செல்வம், சித்தர் நேரடிப் பேச்சு

## மாவை பங்கேற்கவில்லை

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு கட்சிகளின் தலைவர்களும் தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியினரும் யாழ்ப்பாணத்தில் இன்று நேரடிப் பேச்சில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். ☞ 2

## கொரோனாச் சட்ட விதியை மீறிய மேலும் 207 பேர் கைது

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 207 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 24 மணிநேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இன்று காலை தெரிவித்தார்.

இதன்படி கடந்த வருடம் ஒக்டோபர் ☞ 2

## பருத்தித்துறை வர்த்தகர்கள் ஆறு பேருடன் தொடர்புடைய 70 பேரையும் காணவில்லை

(இ.கலையமுதன்)

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 6 வர்த்தகர்கள் தலைமறைவாகிய நிலையில் அவர்களுடன் பணியாற்றிய 70 பேரைக் காணவில்லை என்று சுகாதாரத் துறையினர் தேடி வருகின்றனர்.

அவர்கள் சமூகத்தில் நடமாடுவதால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என சுகாதாரத் துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகரில் கொரோனாத் ☞ 2

## குழந்தைப் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி

இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக குழந்தைப் பிறப்பு விகிதம் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணமாக திருமண ☞ 2

## ராஜபக்ஷ மும்மூர்த்திகள் தலைமையில் நாளை ஆளுந்தரப்பின் முக்கிய கூட்டம்

கட்டாயம் பங்கேற்குமாறு எம்.பிக்களுக்குப் பணிப்புரை



ஆளுங்கட்சியின் விசேட நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. ☞ 2

## ஆட்சியைக் கவிழ்க்கவே நாட்டில் போராட்ட அலை

### சீறுகின்றார் அமைச்சர் வீரசேகர



அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்பி ஆட்சியைக் கவிழ்க்கும் குறுகிய நோக்கத்தின் அடிப்படையிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாணந்துறை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது உருவாகியுள்ள போராட்ட ☞ 2

## அரச அராஜகத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடரும்!

### விடுவிக்கப்பட்ட ஜோசப் ஸ்டாலின் சூளுரை



இலவசக் கல்வியை இராணுவமயப்படுத்த முயலும் அரசின் அராஜகத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நியாயமற்ற முறையிலேயே நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், எமது விடுதலையை வலியுறுத்தியும் நாடு முழுவதும் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது பக்க நியாயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்திய சகல ஊடகங்களுக்கும் நன்றியைக் கூறுகின்றோம் என்றும் அவர் மேலும் கூறினார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொரோனாச் சட்ட விதியை................

(முதலாம் பக்க தொடர்ச்சி)
மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்து 391 ஆக எகிறியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## தனிமைப்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் மிஹிப்பிட்டிய கிராம சேவகர் பிரிவின் மாதெய்யாவ கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகல தோட்ட மேற்பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கிராமசேவகர்பிரிவுதனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் சுதுகம்பல மேற்கு மற்றும் கிழக்கு கிராமசேவகர் பிரிவுகளின் விஹாரை வீதி, விஹாரை ஒழுங்கை, கப்பர தேவாலய வீதி, வெலமெத்த பாரகம பகுதி என்பனவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

## ஆட்சியைக்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
அலையானது,மக்களுக்கான நலன்புரி விடயங்களை அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாறாக அரசின் வேலைத் திட்டங்களைக் குழப்பி, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான துஷ்ட நடவடிக்கையாகும்.

போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஜனநாயக உரிமை அதனை முன்னெடுப்பவர்களுக்கு இருப்பதால் இதுவரை காலமும் பொலிஸார் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் போராட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு தடை விதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து எமக்கு தெளிவானதொரு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதற்கமையவே பொலிஸார் சென்று அன்று போராட்டத்தை நிறுத்தினர். பொலிஸாரின் தேவைக்காக அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு கொண்டு செல்லவில்லை.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உத்தியோகபூர்வமாக முன்வைத்த கோரிக்கையின் பிரகாரமே தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர் - என்றார்.

## அரச அராஜகத்துக்கு....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேரும் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

அரசின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

நீதிமன்ற வளாகத்தில் இருந்து பொலிஸ் பஸ்ஸில் முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆசிரியர் சங்கங்கள் இணையவழி கற்பித்தலைப் புறக்கணித்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டன.

இதையடுத்து, 8 நாள்களின் பின்னர், நேற்று மாலை அவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

## ராஜபக்ஷ மும்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில வுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் 19ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மறுநாள் 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. எனவே, இதன்போது ஆளுங்கட்சியிலுள்ள அனைவரும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் மேற்படிக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், அரச கூட்டணியில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடி முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

## குழந்தைப் பிறப்பு.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
வைபவங்கள் நடக்காத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

வருடம் ஒன்றிற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் வரையில் குழந்தை பிறப்புக்கள் இடம்பெறும் நிலையில், கொரோனாத் தொற்று நிலைமையால் இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் கருத்தரிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் கடந்த சில மாதங்களில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 6 வர்த்தகர்களும் புத்தளம் மற்றும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள்.

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறிப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொற்றாளர்களை அடையாளம் கண்டு கொரோனா இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பும் பணியில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்ட போது 6 வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கிய நிலையில் தமது சொந்த ஊரான புத்தளம் மற்றும் காத்தான்குடிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுடன் பணியாற்றியவர்களைச் சுயதனிமைப்படுத்தச் சென்றபோது அவர்களும் தலைமறைவாகியுள்ளனர்.

அவ்வாறு சுயதனிமைப்படுத்துவதற்றாக 70 பேரின் விவரங்களுடன் சுகாதாரத்துறையினர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

## யாழில் விக்கி........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ முன்னெடுத்து வரும் ஒற்றுமை முயற்சியின் ஓர் அங்கமாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எனினும், மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜாவுக்கு தொலைபேசி வழியாக அழைப்பு விடுத்திருந்தார். எனினும், அவர் பிறிதொரு நிகழ்வுக்காகக் கொழும்பில் தங்கியுள்ளார். அதனால் அவர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர் சார்பில் பிரதிநிதிகள் எவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில், எமது ஒற்றுமை முயற்சி பதவியை, தலைமையை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்கள் நலன் சார்ந்தது எனக் கூட்டத்தின் ஆரம்பத்தில் ரெலோ தரப்பால் கூறப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் சார்பின் கலந்துகொண்ட அதன் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொஞ்சம் காட்டமாகக் கருத்து தெரிவித்தார்.

ஏற்கனவே 10 கட்சிகள் ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்த் தேசியப் பேரவை பற்றி நான் கருத்துத் தெரிவித்தது பிழை என்று தமிழரசுக் கட்சி குழப்பியது. ரெலோவும் அதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. அது பிழையென்றால், அது பற்றி கலந்துரையாடியிருக்கலாம். அதை விட்டு, குழப்புவதைப் போல் நடந்து விட்டு, இப்போது புதிய கூட்டணி முயற்சிக்கு ஏன் வருகின்றீர்கள்? என்று செல்வம் அடைக்கலநாதனிடம் கேள்வியெழுப்பினார் சுரேஷ்.

பழைய முயற்சிகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்து அதனையே தொடரலாம் என்றும் சுரேஷ் குறிப்பிட்டார்.

எனினும், ஒற்றுமை முயற்சியின் அவசியத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஏனைய இரண்டு கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய கட்சி ஆகியன ஏற்றுக்கொண்டன. ஆனால், அது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே செல்வம் உங்கள் முயற்சி பெயிலியர் என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

சந்திப்பின் இறுதியில் விக்னேஸ்வரன், நாம் என்ன அடிப்படையில் சேர்ந்தியங்குவதென்பதை தீர்மானிக்க வேண்டும். தமிழ்த் தேசியப் பேரவையா, கூட்டணியா அல்லது வேறு வடிவமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எந்தப் பிரச்சினைகளில் சேர்ந்தியங்குவது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்காக முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிடுவோம். அதில் எதில் இணைந்து செயற்படுவது என்பதைத் தீர்மானிப்போம் என்று கூறினார்.

ZOOM மூலம் IELTS வகுப்பு
ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-
076- 5500036



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# முடிவுக்கு வராத பிணக்கு

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தல் முகாமிற்கு வலுக் கட்டாயமாக அனுப்பப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின், முன்னணி சோசலிஷக் கட்சியின் செயலாளர் துமிந்த நாகமுவ உட்பட 16 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

பதினான்கு நாள்கள் தனிமைப்படுத்தல் என்ற பெயரில் வல்வந்தமாக அள்ளிச் செல்லப்பட்ட அவர்கள் எட்டாம் நாளிலேயே விடுவிக்கப்பட்டு விட்டனர்.

அவர்களின் வல்வந்தமான தடுப்பைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட எழுச்சிப் போராட்டங்களை அடுத்து, உருவாகி வந்த மக்கள் கிளர்ச்சியின் தன்மையைப் புரிந்து கொண்ட அரசு அவர்களை விடுவித்து நிலைமையின் சூட்டைத் தணிக்க முயன்றிருக்கின்றது என்பது தெளிவு.

பதினான்கு நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தல் என்ற அறிவிப்போடு தனது கெடுபிடிப் போக்கைக் கட்டவிழ்த்து விட்ட அரசு, எட்டு நாள்களோடு தனது வாலைச் சுருட்டிக் கொண்டு மெல்ல அவர்களை விடுவித்திருக்கின்றது. முற்கூட்டிய விடுவிப்புக்கான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை.

சுகாதாரத் தடுப்பு விதிகளின்படியான தனிமைப்படுத்தல் என்றால், முற்கூட்டிய விடுவிப்புக்கான சுகாதாரக் காரணங்கள் கட்டாயம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் – காரணங்கள், விளக்கங்கள் கூறாமல் – அவர்களை விடுவித்தமை மூலம் இந்தத் தனிமைப்படுத்தல் சட்டவிரோதமானது, அரசியல் பழிவாங்கல் இலக்கைக் கொண்டது, அதிகாரத் துஷ்பிரயோகச் செயற்பாடு என்பவற்றை எல்லாம் ஒப்புக் கொள்ளாமல் ஒப்புக் கொண்டிருக்கின்றது அரசு என்பதுதான் அர்த்தம்.

கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமி தொடர்பான சட்ட மூலத்தை ஒட்டி, அது விடயத்தில் தமது ஜனநாயக எதிர்ப்பைக் காட்டவே ஜோஸப் ஸ்டாலினும் ஏனையோரும் சமூக இடைவெளி பேணி ஒன்று கூடினார்.

தமது ஜனநாயக உரிமையை – அஹிம்சை ரீதியான எதிர்ப்பை – வெளிப்படுத்திய அவர்களை அரசியல் பழிவாங்கல் நோக்கில் அரசு கைது செய்தது. ஆனால் விடயத்தை ஆராய்ந்த நீதிமன்றம் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தது. எனினும் பிணையில் விடப்பட்டவர்களை வல்வந்தமாகக் கூட்டிச் சென்று தடுத்து வைத்தது ஆட்சிப்பீடம்.

கொரோனாத் தொற்றுத் தடுப்புத் தொடர்பாக பிந்திய வழிகாட்டல் குறிப்புக்களின்படி சமூக ஒன்றுகூடல் தொடர்பான பல விடயங்களில் இறுக்கம் தளர்த்தப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. திருமண நிகழ்வுகள், ஆலயப் பூஜைகள் மட்டுப்படுத்தப்பட்ட ஆள்களுடன் நடத்தலாம். மஸாஜ் கிளினிக்குகள் ('ஸ்பா' நிலையங்கள்) கூட இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் சமூக இடைவெளி பேணியபடி ஜனநாயக எதிர்ப்பைக் காட்டியவர்களை – நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட சமூகப் பிரமுகர்களை – தனிமைப்படுத்தல் விதிகளின் கீழ் வல்வந்தமாகத் தடுத்து வைத்தமை மிக மோசமான அடிப்படை உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வழிப்படுத்தல் படிதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் மற்றும் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருக்கின்றார்.

அது உண்மையானால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் செயற்போக்கும் நடைமுறைகளும் கேள்விக்குள்ளாக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது.

கட்டாயத் தனிமைப்படுத்தலில் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டமையுடன் இந்த அத்துமீறல் அடாவடித்தனப் பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது எனக் கருதமுடியாது.

ஏற்கனவே இந்தக் கட்டாயத் தனிமைப்படுத்தலை ஆட்சேவித்து மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை இன்னும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கட்டாயத் தனிமைப்படுத்தல் முடிவுக்கு வந்து விட்ட காரணத்துக்காக அந்த மனுக்கள் தொடர்பான சர்ச்சை – பிணக்கு – முடிவுக்கு வந்து விட்டது என்று அர்த்தமல்ல.

இந்தக் குற்றத் தவறுக்கு – அத்துமீறலுக்கு – காரணமானோர் சட்டரீதியாக அடையாளம் காணப்படும் வரை இந்தப் பிணக்குத் தொடரவே செய்யும்.



# பல நாள் படகுக் கண்காணிப்பு தொகுதி இலங்கைக்கு ஆஸ்திரேலியா அன்பளிப்பு

சமுத்திரப் பாதுகாப்புக்கு உதவும் பல நாள் படகுக் கண்காணிப்புத் தொகுதி ஒன்றை, ஆஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

சட்டவிரோத மீன்பிடியைத் தடுத்தல், நாட்டின் எல்லைகள், இந்து சமுத்திர வலயப் பாதுகாப்பு, படகுகள் மூலம் மேற்கொள்ளப்படும் மனித மற்றும் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுத்தல் போன்றவற்றுடன், அனர்த்தத்துக்கு உள்ளாகும் படகுகளை இனங்கண்டு மீனவர்களைக் காப்பாற்றுவதற்கு, இந்தக் கண்காணிப்புத் தொகுதி பெரிதும் உதவுமென இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தெரிவித்தார்.

படகுகளில் பொருத்தப்படும் 4 ஆயிரம் 200 சமிக்ஞை செலுத்தி – வாங்கிகள், கண்காணிப்பு மத்திய நிலையத்துக்குத் தேவையான அனைத்து வகையான கருவிகள், செட்டலைட் தொழிநுட்ப வசதிகளை உள்ளடக்கிய இந்தக் கண்காணிப்புத் தொகுதியின் பெறுமதி, 58 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களாகும். இந்தக் கண்காணிப்பு மத்தியநிலையம், கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட உள்ளது.

இதன் முதலாவது ட்ரான்ஸ் பொன்டர் தொகுதி, நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலியால் கையளிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு பொருத்தப்பட்டு, தற்போது செயலிழந்துள்ள இதுபோன்ற 1,250 ட்ரான்ஸ் பொன்டர்கள், பல நாள் படகுகளில் உள்ளன. இந்த இயந்திரங்களை நவீனமயப்படுத்துவதற்கு உதவுமாறு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கோரிக்கை தொடர்பில் உயர்ஸ்தானிகர் கவனம் செலுத்தினார்.

மக்கள் மைய பொருளாதாரக் கொள்கையை பலப்படுத்தி, சர்வதேச தரத்துக்கேற்ப மீன் மற்றும் கடற்றொழில் சார்ந்த ஏற்றுமதி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு, இந்தக் கண்காணிப்பு முறைமை பெரிதும் உதவுமென, புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைத் தலைவர் சரத் தாஸ் தெரிவித்தார்.

முக்கியத்துவம் வாய்ந்த பூகோள அமைவிடத்தைக் கொண்டுள்ள இலங்கையின் சமுத்திரப் பாதுகாப்புக்கு, இந்தக் கண்காணிப்பு முறைமையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார். மேலும், ஆஸ்திரேலியா அரசாங்கம் இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கி வரும் உதவிகளுக்கும், ஜனாதிபதி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஸ் குணவர்தன, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், அமைச்சுகளின் செயலாளர், பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்கள். ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள், இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவையை ஆரம்பிக்க ஜனாதிபதி கோட்டா பணிப்பு

நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதாரப் பிரிவினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஊனமுற்றவர்கள் மற்றும் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள வீடுகளில் இருந்து வெளியேற முடியாதவர்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டு வரும் நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# டெல்டா திரிவுடன் 11 பேர் கொழும்பில் அடையாளம்

டெல்டா திரிவுடன் 11 பேர், கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொழும்பு மாநகரசபையின் பிரதான வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

இதில் 5 பேர், கெத்தாராம விளையாட்டரங்கில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டவர்கள் எனவும் 2 பேர் வட கொழும்பில் உள்ளவர்கள் எனவும் இரண்டு பேர் தெமடகொடையில் உள்ளவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் டெல்டா திரிபுடன் தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, நாட்டில் டெல்டா திரிவுடன் கூடிய 36 பேர் இதுவரை அடையாளம் காணப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து இடைநிறுத்தம்

*மாகாணங்களுக்குஇடையிலான பொதுப் போக்குவரத்து சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.*

*இன்று (சனிக்கிழமை) முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரையில் இவ்வாறு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.*

*இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் திரிவடைந்த கொரோனா வைரஸ்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஐரோப்பாவை புரட்டிப் போட்ட கன மழை..!

## வெள்ளத்தில் சிக்கி 125 பேர் சாவு 1,000 பேர் மாயம்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி 125 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். காணாமல் போன ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை தேடும் பணி தீவிரமடைந்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் திடீர் காலநிலை மாற்றத்தினால் கனமழை பெய்து வருகிறது. ஜேர்மனியில் உள்ள எர்ப்ஸ்டாட் என்ற பகுதியில் கனமழை காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கியவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர்

பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால் மீட்புப் பணியில் படகுகளுடன் ஆம்புலன்ஸ் வாகனங்கள் விரைந்துள்ளன.

ரைன்லேண்ட்-பலட்டினேட் மாகாணத்தில் உள்ள, அஹ்ர் வீலர் மாவட்டத்தில், சுமார் ஆயிரத்து 300 பேரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது. இந்த மாகாணத்தில் 100 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் சுமார் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மின்சாரம் இன்றி தவித்து வருகின்றனர்.


வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டதால் ரைன் லேண்ட் பகுதியே வெறிச்சோடிக் காணப்படுகிறது. நகரமெங்கும் குப்பை கூழங்கள் மட்டுமே நிறைந்துள்ளது. வெள்ளத்தின் காரணமாக சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. இதேபோல் பெல்ஜியத்தில் உள்ள லீஜ் என்ற நகரத்தில் வெள்ளத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். சாலைகளில் பல அடி உயரத்திற்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் பாலங்கள் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர்.

நாடு இதுவரை கண்டிராத பேரழிவு ஏற்பட்டுள்ளதாக பெல்ஜியம் பிரதமர் அலெக்ஸாண்டர் டிக்ரூ தெரிவித்துள்ளார். மேலும் வரும் 20ஆம் திகதியை தேசிய துக்க தினமாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# அதிக அறிகுறிகள் கொரோனா தீவிரம்

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு உடல் சோர்வு, மூச்சுத் திணறல், தசை வலி, இருமல், மூட்டுவலி, நெஞ்சுவலி, வாசனை உணராமை, வயிற்றுப்போக்கு, சுவையின்மை ஆகியவை அறிகுறிகளாக கருதப்படுகின்றன.

இந்த அறிகுறிகள் தொடர்பாக இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆய்வு நடத்தி அதன் முடிவுகளை ‘ராயல் சொசைட்டி ஆப் மெடிசின்’ பத்திரிகையில் வெளியிட்டுள்ளனர்.



அதில் 5 இற்கும் மேற்பட்ட அறிகுறிகளுடன் கொரோனா பாதிப்புக்கு ஒருவர் ஆளாகிறபோது, அவர் மாதக்கணக்கில் கொரோனாத் தொற்றினால் மோசமாக அவதிப்பட நேரிடும் என தெரிய வந்துள்ளது.

குறிப்பாக உடல் சோர்வு, தலைவலி, மூக்கு ஒழுகுதல், இருமல், நாசி நெரிசல் ஆகியவற்றுடன் சுவாசக் கோளாறு இருந்தால் நீண்ட காலம் கொரோனாப் பாதிப்பு இருக்கும் என தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர், கொரோனாவால் 8 வாரங்களுக்கு மேலாக மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளனர்.

## தலிபான் தாக்குதலில் இந்திய படச் செய்தியாளர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் தீவிரவாதிகளை அடக்குவதற்காக இராணுவம் தாக்குதல் நடத்துவதும், இராணுவத்தினர் மீது தலிபான்கள் வெடிகுண்டு தாக்குதல்கள் நிகழ்த்துவதும் அவ்வப்போது நிகழ்ந்து வருகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதலில் இந்தியாவைச் சேர்ந்த ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன படச் செய்தியாளர் தனிஷ் சித்திக் மரணம் அடைந்துள்ளார்.

காந்தகாரில் நடத்தப்பட்ட தாக்குதலில் சிக்கி உயிரிழந்த தனிஷ் சித்திக், தனது திறமைக்கு சான்றாக உயரிய புலிட்சர் பரிசு வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டோக்கியோ ஒலிம்பிக் கிராமத்தில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று!

### போட்டிகள் தொடங்க 6 நாள்களே உள்ள நிலையில் ஏற்பாட்டாளர்கள் அதிர்ச்சி



ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்க இன்னும் 6 நாள்களே உள்ள நிலையில், டோக்கியோ ஒலிம்பிக் கிராமத்தில் தங்கியிருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த நபர் ஆயிரக்கணக்கான வீரர்கள் தங்க உள்ள ஒலிம்பிக் கிராமத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். கொரோனா பாதித்த நபர் யார் என்கிற விவரத்தை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.



## சீனாவில் தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு செல்வதற்குத் தடை

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பல நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், மருத்துவமனைகள், பள்ளிகள் உள்ளிட்ட பொது இடங்களுக்குச் செல்ல தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடை விதிக்கப்படும் என சீன அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸானது சீனாவில் பரவத் தொடங்கி இருந்தாலும், கட்டுப்பாடுகளை மேற்கொண்டதன் மூலம் அந்நாடு அதனை கட்டுப்படுத்தியது. இருப்பினும், ஆசிய நாடுகளில் டெல்டா வகை கொரோனா வேகமாக பரவிவரும் நிலையில், சீனா புதிய விதிகளை அறிவித்துள்ளது.

அதன்படி, இரண்டாம் நிலை நகரங்களில் கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஜூலை 23ஆம் திகதிக்குள் சுக்சியாங் நகர மக்கள் ஒரு தவணை தடுப்பூசியாவது செலுத்தியிருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது. அப்படி செய்யவில்லை எனில், மருத்துவமனைகள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், பள்ளிகள் உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லவும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

# தடுப்பூசி வதந்திகள் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல்

தடுப்பூசி குறித்த தவறான தகவல்கள் பொதுச் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக, அமெரிக்க சர்ஜன் ஜெனரல் விவேக் மூர்த்தி கூறியிருந்தார்.

தடுப்பூசி குறித்த தவறான செய்திகள், தகவல் பெருந்தொற்றாக இருப்பதாகக் கூறியிருந்த அவர், தொழில்நுட்ப நிறுவனங்களும், சமூக வலைத்தளங்களும் தவறான தகவல்கள் பரவுவதைத்தடுக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என விவேக் மூர்த்தி வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்க அதிபர் ஜோ பைடனிடம், தடுப்பூசி குறித்த தவறான தகவல்கள் பரவும் சமூக வலைத்தளங்கள் குறித்து என்ன கூறவிரும்புகிறீர்கள் என கேள்வி எழுப்பப்பட்டது.

அவர்கள் மக்களை கொல்கிறார்கள் என பதிலளித்த பைடன், தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் மத்தியிலேயே பெருந்தொற்று இருப்பதாக குறிப்பிட்டார்.



# இந்தியாவில் கொரோனா 3 ஆவது அலை ஓகஸ்டில் தினமும் ஒரு இலட்சம் பேர் பாதிக்க வாய்ப்புள்ளது!



## மூத்த ஆய்வாளர் தகவல்

இந்தியாவில் கொரோனாவின் மூன்றாவது அலையின் சாத்தியக்கூறு குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, லண்டனின் இம்பீரியல் கல்லூரியின் பொதுமக்கள் சுகாதாரத்துக்கான பிரிவுடன் இணைந்து ஒரு தரவு அடிப்படையிலான ஆய்வை மேற்கொண்டது. இதன் முடிவுகள் பற்றிய தகவல்கள் இந்திய மருத்துவ ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவது அலை ஏற்படக்கூடிய சாத்தியம் பற்றி நம்பத்தகுந்த ஆதாரங்களை அதுகொடுத்துள்ளது. அதேசமயம்மூன்றாவது அலை, இரண்டாவது அலை போல பெரியதாக இருக்க வாய்ப்பில்லை என்பதையும் அந்த ஆய்வு விளக்குகிறது. கொரோனாவின் மூன்றாவது அலை குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பின் தொற்று நோயியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சமிரன் பாண்டா கூறும்போது, கொரோனா மூன்றாவது அலை ஓகஸ்ட் மாதம் தொடங்க வாய்ப்பு உள்ளது. அப்போது தினமும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் கொரோனா தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்படலாம்.

தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் மேலும் பரவும் தன்மைக்கு வழிவகுக்காவிட்டால், அடுத்த கட்ட நிலைமை கொரோனா முதல் அலைக்கு ஒத்ததாக இருக்கும். வைரஸ் மேலும் மாற்றம் அடைந்தால் நிலைமை மோசமாக இருக்கும்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு மற்றும் லண்டன் இம்பீரியல் கல்லூரி ஆகியவற்றால் செய்யப்பட்ட தரவுக் கணிப்பில், குறைந்த தடுப்பூசி வீதங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை தளர்த்துவது போன்றன கொரோனாப் பாதிப்பில் அதிக எழுச்சிக்கு வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், இது இரண்டாவது அலை போல அது கடுமையானதாக இருக்காது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதையும் நாம் அவதானிக்கவேண்டும்.

கூட்டம் கூடுவதைத் தவிர்ப்பது, முகக்கவசம் அணிவதுபோன்றமருந்தியல்அல்லாதநடவடிக்கைகள் நோய்த் தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்த உதவும். தற்போதைய தடுப்பூசி செலுத்தும் வீதம் குறைவாகவே உள்ளது. இதைவிட சிறப்பான தடுப்பூசி வழங்கும் திட்டம் இருக்க வேண்டும் என்று நான் ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்திருக்கிறார்.

## 65 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை கொள்முதல் செய்ய இந்திய அரசு ஒப்பந்தம்



வரும் டிசெம்பர் மாதம் வரை 65.5 கோடி கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்ய இந்திய மத்திய அரசு ஒப்பந்தத்தை இறுதி செய்திருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிஷீல்ட் தடுப்பூசியை தயாரிக்கும் சீரம் இன்ஸ்டிடியூட் மற்றும் கொவோக்சின் தடுப்பூசியை தயாரிக்கும் பாரத் பயோடெக் ஆகிய நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தங்களை இந்திய அரசு இறுதி செய்துள்ளது. இதன்மூலமாககொவிஷீல்ட் தடுப்பூசி ஒன்று ரூபா.205இற்கும், கொவோக்சின் தடுப்பூசி ரூபா.215 இற் கும் கொள்முதல் செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

சீரம் நிறுவனத்திடம் 37 கோடி கொவிஷீல்ட் தடுப்பூசிகளையும், பாரத் பயோடெக்கிடம் 28.5 கோடி கோவாக்ஸின் தடுப்பூசிகளையும் பெறஒப்பந்தம்செய்யப்பட்டிருக்கிறது. தற்போது பல மாநிலங்களில் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் சூழலில், இந்த ஒப்பந்தம் மூலமாக கொள்முதல் செய்யப்படும் தடுப்பூசிகளை விரைவாக மாநிலங்களுக்கு வழங்கவும், வரும் டிசெம்பருக்குள் நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முழுமையாக தடுப்பூசிசெலுத்தும்பணியைநிறைவு செய்யவும் இந்திய அரசு திட்டமிட்டிருப்பதாகசெய்திகள்தெரிவிக்கின்றன.

## சிவசங்கர் பாபாவுக்கு உதவினராம் ஆசிரியைகள் ஐந்து பேர் தலைமறைவு



சுஷில்ஹரி பாடசாலை மாணவிகளுக்கு சிவசங்கர் பாபா பாலியல் தொல்லை கொடுக்க உதவினார்கள் என ஆசிரியைகளான காயத்ரி, பிரவீனா உள்ளிட்ட5பேர்மீதுபுகார்அளிக்கப்பட்டது. இந்தப் புகாரையடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரி யைகளுக்கு சம்மன் அனுப்பி திங்கட் கிழமை முதல் அவர்களை விசாரிக்க சி.பி.சி.ஐ.டி. திட்டமிட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் அழைப்பானை கொடுப்பதற்குச் சென்றபோது குறித்த ஆசிரியைகள் தலைமறைவாகிவிட்டனர். அதன்பின்னர் கேளம்பாக்கம் பழனி கார்டனில் உள்ள அந்த ஆசிரியைகள் ஐவரின் வீடுகளிலும் அழைப்பானை ஒட்டப்பட்டுள்ளது.

தற்போது தப்பியோடிய ஆசிரியைகளைத் தேடிப்பிடிக்கவும், தலைமறைவாகவுள்ள சுஷில்ஹரி பள்ளியின் ஏனைய ஆசிரியைகளின் பட்டியலைத் தயாரிக்கும் பணியிலும் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் தீவிரம் காட்டிவருகின்றனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மோடியின் பாராட்டுக்கு பிரியங்கா அதிருப்தி!

நேற்று முன்தினம் உத்தரப்பிரதேச மாநிலத்தின் வாரணாசிக்குச் சென்ற இந்தியப் பிரதமர் மோடி அங்கு வளர்ச்சித்திட்ட தொடக்க விழாவில் உரையாற்றியிருந்தார். அப்போது, உத்தரப்பிரதேசத்தில் கொரோனாவைச் சிறப்பாக கட்டுப்படுத்தியதாக யோகி ஆதித்யநாத் அரசுக்குப் பாராட்டை அவர் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச அரசுக்கான மோடியின் பாரட்டுக்குறித்துகாங்கிரஸ்பொதுச்செயலாளர் பிரியங்கா தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார். அவர் தனது ‘டுவிட்டர்’ பக்கத்தில், ‘கொரோனாவின் இரண்டாவது அலையின் போது யோகி ஆதித்யநாத் அரசு இழைத்த கொடுமைகள், காட்டிய அலட்சியம், தவறான நிர்வாகம் ஆகியவை பற்றிய உண்மைகளை மோடியின் நற்சான்றிதழால் மறைத்துவிட முடியாது. மக்கள் எண்ணற்ற இன்னல்களை அனுபவித்துள்ளனர். இந்த உண்மையை மோடியும், யோகி ஆதித்யநாத்தும் மறக்கலாம். ஆனால், வேதனையைத் தாங்கிய மக்கள் மறக்க மாட்டார்கள்!’ என்று அவர் பதிவிட்டிருக்கிறார்.



## கொங்குநாட்டை தனிமாநிலமாக்குவது பா.ஜ.கவின் நிலைப்பாடு இல்லையாம்

### மாநிலத் தலைவராக பொறுப்பேற்ற அண்ணாமலை விளக்கம்




தமிழக மாநில பா.ஜ.க. தலைவராக இருந்த எல்.முருகன் மத்திய இணையமைச்சராக பொறுப்பேற்றபோது அவருடைய சுய விவரத்தில் ‘கொங்கு நாடு’ என இடம்பெற்றிருந்தது. இது பல்வேறு சமூக ஊடகங்களில் மிகப் பெரிய விவாதப் பொருளானது. கொங்குநாடு தொடர்பான பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசனின் டுவீட் பதிவொன்றும் விவாதத்துக்குள்ளானது.

இது தொடர்பாக பல்வேறு கண்டனங்களும், எதிர்வினைகளும் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன. இருப்பினும், பா.ஜ.க. தலைமைத் தரப்பில் இவைகுறித்து வெளிப்படையாக எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து மேற்கு மண்டலமான கொங்கு பகுதியை ஒருங்கிணைத்து ‘கொங்குநாடு’ என தனி மாநிலமாக உருவாக்க தருமபுரியில் பா.ஜ.கவின் கூட்டத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தச் செயற்பாடு கொங்குநாடு விவகாரத்தில் மேலும் விவாதத்தை சூடுபிடிக்க வைத்தது. இந்த நிலையில், தமிழக பா.ஜ.கவின் மாநிலத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட அண்ணாமலை சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியிருந்தார். அவரோடு அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

அப்போது எல்.முருகன் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றபோது அவருடைய சுய விவரத்தில் ‘கொங்கு நாடு’ என இடம்பெற்றிருந்தது குறித்து செய்தியாளர்கள் தரப்பில் கேட்கப்பட்டது.

இதுகுறித்து அண்ணாமலை பதிலளித்தபோது, தற்போது டுவிட்டரில் அனைவருமேதங்களுடையஅடையாளமாக பாண்டிய நாடு, சோழ நாடு, கொங்குநாடு என போட்டுக்கொள்கின்றனர். அதுபோல முருகனும் தமிழ்நாட்டிலிருந்து மத்திய அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட ஒருவர்'' என்று கூறினார். அப்போது இடைமறித்த எல்.முருகன், இது விவாதத்திற் குரிய வியமே அல்ல; அது ஒரு தட்டச்சுப் பிழையே (Clerical mistake)'' என்று கூறி விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அடுத்து, தருமபுரி பா.ஜ.க. மாவட்ட கூட்டத்தில் கொங்கு நாட்டை புதிய மாநிலமாக உருவாக்க வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அண்ணாமலை, ஒரு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதில் எங்களுடைய சில தலைவர்களும் கலந்து கொண்டனர். உடனடியாக அந்த மாவட்டத் தலைவரை தொடர்புகொண்டு கட்சியின் நிலைப்பாடு அது இல்லை என்கிறபோது எதற்காக இதுபோன்ற தீர்மானத்தை எடுத்தார்கள்? என்பது குறித்த விளக்கத்தைக் கேட்டிருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாடு அதுவல்ல என்பதை தெளிவுப்படுத்துகிறோம்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# மட்டக்களப்பு 10 ஆயிரம் ஏக்கர் காணியில் இராணுவமுகாம் அமைக்கும் திட்டத்திற்கு துரைரெட்ணம் கடும் கண்டனம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளின் மேய்சல்தரையின் 10 ஆயிரம் ஏக்கர் காணியை இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பாக ஆளும் தரப்பாக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன்,இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் இருவருக்கும் தெரியுமா ? அல்லது இருவருடைய அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகின்றதா? என ஈபி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்றத் தலைவரும் முன்னாள் கிழக்குமாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள ஈ.பி,ஆர்.எல்.எப். பத்மநாபா மன்ற காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி கிரான் பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள கால்நடை பண்ணையாளர்களுக்குரிய காணிகளை 4 தசாப்தங்களுக்கு மேலாக கால்நடை பண்ணையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர் இந்த நிலையில் இக்காணியில் 10 ஆயிரம் ஏக்கர் காணியை இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றனவா? இத்திட்டத்தால் கிடத்தட்ட 30 ஆயிரம் கால்நடைகளுடன் 150 இற்கு மேற்பட்ட கால் நடை பண்ணையாளர்கள் பாதிக்கப்படு வார்கள். ஆகவே இந்த திட்டம் நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன், இக்காணிகள் காணிபயன்பாட்டுக்குழுவின் அனுமதி யுடன் வழங்கப்பட்டாதா என்ற கேள்விக்கு அப்பால் இக் காணிகளை கால்நடை பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்கு ஆளுந்தரப்பைச் சேர்ந்த இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொரோனா சம்பந்தப்பட்ட தடுப்பூசி மேற்கொள்ளப்பட்டுவருவதனால் மிகவிரைவாக மாகாணசபை தேர்தலை நடாத்தமுடியும் . இந்த மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பான்மையான தமிழ் கட்சிகள் 13 வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக இணக்கம் தெரிவித்த நிலையில் இந்த மாகாணசபை முறைமை என்பது முழு இலங்கைக்கும் சதகமான நிலை உருவாக்கும் காரணத்தால் மாகாணசபை தேர்தலை மிகவிரைவாக அமுல்படுத்துவதற்கும் விகிதாசார தேர்தல் முறையை அமுல் படுத்துவதற்கும் இந்திய அரசாங்கம் தலையிட்டு இலங்கை அரசு ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேவேளை இலங்கையின் பொருளாதார தேவைக்காக சீனா அரசாங்கத்துக்கு மட்டும் இலங்கையை தாரைவார்த்துக் கொடுப்பது என்பது துரோகத்தனமான செயற்பாடு எனவே அரசாங்கம் அயல்நாடுகளிலும் சர்வதேச மேலதேய நாடுகளுடனும் ஒரு சரியான ஒரு இணக்கப்பாட்டுடன் இலங்கையில் தேசியத்துக்கு எந்தவிதமான குந்தகமும் வராமலும் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியத்துக்கு எந்தவித குந்தகமும் வராமல் வெளிநாட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தப்படவேண்டும் என்றார்.



## மட்டக்களப்பு சந்திவெளியில் வெடிக்காத வெடிபொருள் மீட்பு

மட்டக்களப்பு சந்திவெளி ஆற்றங்கரை பகுதியில் இருந்து கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை மீட்டுள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவதினமான நேற்று பகல் சந்திவெளி பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள ஆற்றங்கரை பகுதியில் இருந்து வெடிபொருள் ஒன்றை பொலிஸார் இராணுவத்துடன் இணைந்து மீட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 69,531 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன



மட்டக்களப்புமாவட்டத்தில் பரவும்கொரோனாத்தொற்று மற்றும் கொரோனாத் தடுப்பூசிகள் குறித்து மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட் டத்தில் இதுவரையில் 69,531 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்டமாக 19,800 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூ ரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 44 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள தாகவும் மாவட்டத்தில் 7,480பேர் இதுவரையில் கொரனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் அலு வலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுதாவளை சிறுவர் இல்லம்ஒன்றில் 22 சிறுவர்கள்கொரோனா தொற்றுக் குள்ளானதைத் தொடர்ந்து குறித்த இல்லம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




## மட்டக்களப்பில் ஐஸ் மற்றும் கஞ்சாவுடன் நால்வர் கைது

கறுவாக்கேணி வீதி செம்மண்ணோடையில்வைத்து ஐஸ் மற்றும் கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய் வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே நால்வரும் கைது செய்யப்பட் டனர்.

இவர்களிடம் இருந்து ஐஸ் போதைப் பொருள் 30.550 மில்லி கிராமும் கேரளா கஞ்சா 500 மில்லிகிராம் என்பன கைப்பற்றப்பட்டதுடன் இந்த வருடத்தில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கைப்பற் றப்பட்ட அதிகூடிய ஐஸ் போதைப் பொருள் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. சந்தேக நபர்கள் நால்வருள், 45 வயதுடைய இருவரும் 44 மற்றும் 40 வயதுடையவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார் இவர்கள் ஓட்டமாவடி, செம்மண்ஓடை, பிறைத்துறைச்சேனை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்பதுடன் பிர பல போதைவஸ்து வியாபா ரிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.





# இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் 25 பேர்கொண்ட இலங்கை அணி அறிவிப்பு



இந்திய அணியுடனான ஒருநாள், ரி-20 கிரிக்கெட் தொடர்களில் விளையாடவுள்ள 25 பேர் கொண்ட இலங்கை அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற அச்சம் காரணமாக முழுமையான பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே அணித்தேர்வு நடைபெற்றிருப்பதால் விவரங்களை அறிவிக்கத் தாமதமாகியுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

13ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த தொடர், அணியின் பயிற்சியாளர், உத்தியோகத்தர் மற்றும் வீரரொருவருக்கு தொற்று ஏற்பட்டதன் காரணமாக 18ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. நாளைய தினம் ஒருநாள் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ள தொடருக்கான இலங்கை அணி வீரர்கள் விவரம் –

தசுன் சானக (கப்டன்), தனஞ்செய டி சில்வா (துணைக் கப்டன்), அவிஷ்க பொனான்டோ, பானுகா ராஜபக்ஷ, பத்தும் நிஸங்க, சரித் அஸலங்க, வனிந்து ஹஸரங்க, அஷேன் பன்டார, மினோத் பானுக, லஹிரு உதார, ரமேஷ் மெண்டிஸ், சமிக கருணரத்ன, துஷ்மந்த சமீர, லக்ஷன் சந்தகன், அகில தனஞ்செய, ஷிரன் பொணான்டோ, தனஞ்செயலக்ஷன், இஷான் ஜெயரத்னெ, பிரவீன் ஜெயவிக்கிரம, அசித பொனான்டோ, கசுன் ராஜித, லஹிரு குமார, இசுரு உதான

# ஆஸ்திரேலியாவுடனான ரி-20 தொடரை 4-1 என வென்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி



ஆஸ்திரேலிய அணிக்கெதிரான ஐந்தாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்று, 4-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

சென்.லூஸியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. எவின் லுயிஸ் 79 ஓட்டங்களையும் நிக்கோலஸ் பூரன் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் அன்ட்ருடை 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 200 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களையே பெற முடிந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆரோன் பின்ஞ் 34 ஓட்டங்களையும் மிட்செல் மார்ஷ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் செல்டொன் கொட்ரல் மற்றும் அன்ட்ரே ரஸல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக எவின் லுயிஸும் தொடரின் நாயகனாக ஹெய்டன் வோல்ஷும் தெரிவு செய்யப்பட்டனர்.

இரு அணிகளும் விளையாடவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடர் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



# இந்திய அணிக்கெதிரான தொடர்களிலிருந்து குசல் பெரேரா விலகினார்

இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களிலிருந்து, இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரான குசல் ஜனித் பெரேரா விலகியுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் அணித்தலைவராக செயற்பட்ட குசல் ஜனித் பெரேராவுக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவருக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் ஓய்வு தேவைப்படுவதால், அவர் இந்தியாவுக்கெதிரான தொடரில் இணைக்கப்படவில்லை என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.



# முதல் ரி-20 போட்டியில் இங்கிலாந்தை வென்றது பாகிஸ்தான்

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 31 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

ட்ரெண்ட் பிரிட்ஜ் – நொட்டிங்ஹாம் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைச் சேர்த்தது. பாபர் அசாம் 85 ஓட்டங்களையும் ரிஸ்வான் 63 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் டொம் கரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 233 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 19.2 ஓவர்களில் 201 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான் அணி 31 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இங்கிலாந்தின் லியாம் லிவிங்டன் 103 ஓட்டங்களையும் ஜேஸன் ரோய் 32 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஷாயின் ஷா அப்ரிடி மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் ஷாயின் ஷா அப்ரிடி தெரிவு செய்யப்பட்டார். இந்த இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது

# ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அணிகளின் குழு விவரம் வெளியீடு

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அணிகள் இடம்பெறும் குழுக்களின் விவரங்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ளது.

முதல் குழுவில் நடப்பு சம்பியன் மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் தேர்வாகும் இரு அணிகள்.

குழு இரண்டில் இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் தேர்வாகும் இரு அணிகள்.

இந்தச் சுற்றுக்கு சுப்பர்-12 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தகுதிச்சுற்றுப் போட்டிகள் முதல் சுற்றுப் போட்டிகளாக அழைக்கப்படுகின்றன. அவற்றில் குழு ஏ யில் இலங்கை, அயர்லாந்து, நெதர்லாந்து, நமிபியா ஆகிய அணிகளும் குழு பி யில் பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, ஓமான், பப்புவா நியூகினியா ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களைப் பிடிக்கும் இரு அணிகள் சுப்பர் – 12 சுற்றில் இதர எட்டு அணிகளுடன் சேர்ந்துவிடும். முதல் சுற்றுப் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்திலும் ஓமனிலும் நடைபெறவுள்ளன.

இந்தியாவில் நடத்தப்படவிருந்த ரி-20 உலகக்கிண்ண தொடர், கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் நடைபெறுகிறது. இந்தத் தொடர், இந்தியாவில் நடைபெறாவிட்டாலும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சார்பாகவே நடைபெறவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரில் ஒரே குழுவில் இடம் பிடித்திருக்கும் இந்திய – பாகிஸ்தான் அணிகள் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

டுபாய், அபுதாபி, ஷார்ஜா, ஓமான் என நான்கு இடங்களில் ரி-20 உலகக்கிண்ண தொடரின் போட்டிகள் நடைபெறுகின்றன.



# ஆஸியில் இன்று 92 ஆவது பிறந்த தினத்தில் கலை, இலக்கிய ஊடகர் ஞானம் இரத்தினம்

## இலங்கை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் திட்டமிடல் குழுவிலும் மிகத் துடிப்புடன் இயங்கியவர்

முருகபூபதி




ஆஸ்திரேலியாவில் தமிழ் - கலை - இலக்கிய ஊடகத்துறையில் பெண்களின் வகிபாகம் என்ற கட்டுரையை நான் எழுதத் தொடங்கியபோது, இங்கு எம் மத்தியில் வாழும் மூத்தவர் திருமதி ஞானம் இரத்தினம் அவர்களும் முதலில் நினைவுக்கு வந்தார்கள்.


அவருக்கு இம்மாதம் 17 ஆம் திகதி (இன்று) 92 வயது பிறக்கிறது என்ற செய்தியை சிட்னியில் வதியும் எழுத்தாளரும் வானொலி ஊடகவியலாளருமான கானா. பிரபா தெரிவித்தார்.

அத்துடன் நில்லாமல், தாமதிக்காமல் இன்றைய தினம் ஞானம் இரத்தினம் அம்மையாரின் வாழ்வும் பணிகளும் குறித்துப் பேசுவதற்கு இணையவழி காணொலி அரங்கிற்கும் ஏற்பாடு செய்துவிட்டார்.

எமது சமூகத்திற்காக கலை, இலக்கிய, ஊடகத்துறையில் அயராமல் பாடுபட்ட ஆளுமைகளை வாழும் காலத்திலேயே பாராட்டி கௌரவிக்கவேண்டும் என்ற அவரது தீராத ஆவல் முன்மாதிரியானது.

ஆஸ்திரேலியா மெல்பனில் வதியும் நான், சிட்னியில் வதியும் திருமதி ஞானம் இரத்தினம் அம்மையாரை அங்கு சென்ற சந்தர்ப்பங்களில் சில தடவைகள்தான் சந்தித்திருந்தாலும், இலங்கையில் அவர் தமது அன்புக்கணவர் மூத்த எழுத்தாளர் இசையறிஞர் இ. இரத்தினம் மற்றும் குடும்பத்தினருடன் வாழ்ந்த வெள்ளவத்தை இல்லத்தில் அடிக்கடி சந்தித்துள்ளேன்.

திருமதி ஞானம் இரத்தினம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய வேளையில் அவரது அளப்பரிய சேவையை பாராட்டி இக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான(**Chairman**) திரு. நெவில் ஜெயவீரவும் பாராட்டியுள்ளார். இலங்கை வானொலி கல்விச் சேவைக்கும், அங்கிருந்து வெளியான வானொலி மஞ்சரி இதழுக்கும் பொறுப்பாசிரியராக செயல்பட்டிருக்கும் இவர், சிட்னிக்கு வந்த பின்னர் ஆங்கிலத்




தில் எழுதிய நூல் **The Green Light.** இலங்கையில் வானொலி ஒலிபரப்புக்கலை தொடர்பாக தமது பசுமையான நினைவுகளை அதில் பகிர்ந்துகொண்டவர்.

சிட்னியில் நடக்கும் பல்வேறு கலை, இலக்கிய நிகழ்வுகளிலும் உரையாற்றிவந்தவர். 90 வயது கடந்தபின்னரும் இவரது சுவாசத்தில் கலையும் இலக்கியமும் வானொலி ஊடகமும் நிரந்தரமாகியிருக்கின்றன.

எழுத்தாளரும், ஈழத்தில் வெளியான குறிப்பிடத் தகுந்த திரைப்படமான பொன்மணியின் வசனகர்த்தாவுமான காவலூர் இராசதுரையை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி நாம் சிட்னியில் பாராட்டி விருது வழங்கி கௌரவித்தபோது, இலங்கை வானொலியில் அவருடன் பணியாற்றிய திருமதி ஞானம் அம்மையார் அந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து, உரையாற்றுகையில் அன்றிருந்த இலங்கை வானொலி கலையகத்தின் உறைபொருளையும் மறைபொருளையும் சிலாகித்துப்பேசியதை மறக்க இயலாது.

அந்த நிகழ்வில் பேசியவர்கள் நின்றவாறு உரையாற்றினர். அம்மையார், அமர்ந்துகொண்டு பேசுவதே தனக்கு சுலபமானது எனச்சொல்லிவிட்டு, ஒரு வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியையின் பாங்கில் பல விடயங்களை சுவாரசியமாக பகிர்ந்துகொண்டார்.

1974 ஆம் ஆண்டின் பின்னர் கவிஞர் ஈழவாணன் 'அக்னி' என்ற புதுக்கவிதை இதழை வெளியிட்டார். அது எமது நீர்கொழும்பூரில் சாந்தி அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அதில் இடம்பெறுவதற்காக ஆக்கங்கள் பெறுவதற்காக இரத்தினம் அவர்களை நேரில் சந்திப்பதற்கு ஈழவாணனுடன் இரத்தினம் - ஞானம் தம்பதியரை சந்திக்கச் செல்வேன்.

அம்மையார் எம்மை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பார்.

இரத்தினம் அவர்கள் இலங்கையில் நாட்டிய நாடகங்களுக்கு பிரதிகளும் எழுதிக்கொடுத்தவாறு அக்னி முதலான சிற்றிதழ்களில் மேலைத்தேய இலக்கிய வாதிகளின் படைப்புகளையும் மொழிபெயர்த்து வழங்கிக் கொண்டிருந்தார்.

இலங்கை வானொலி அக்காலப்பகுதியில் 'வானொலி மஞ்சரி' என்ற இதழையும் வெளியிட்டது. அதன் ஆசிரியர் குழுவிலும் ஞானம் அம்மையார் அங்கம் வகித்து தரமான ஆக்கங்களை வெளிவரச் செய்தார்.

அப்போது நானும் எழுத்துலகம் பிரவேசம் செய்திருந்த காலப்பகுதி என்பதனால் எனது அபிமான இதழாகவும் குறிப்பிட்ட வானொலி மஞ்சரி திகழ்ந்தது.



தலைநகரத்தில் நாடகக் கலைக்கு நேரடியாக பெண்கள் ஆர்வம் காண்பிக்காத அக்காலப்பகுதியில் ஆண்களே பெண்வேடம் தரித்தனர். பெற்றோரின் அனுமதி அதற்கு கிடைக்காமல் நாடக இயக்குநர்கள் - தயாரிப்பாளர்கள் சிரமப்பட்ட காலம்.

எனினும் வானொலி நாடகங்களில் பெண்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். இலங்கை வானொலியில் தினமும் நாடகங்கள், தொடர் நாடகங்கள் ஒலிபரப்பான பொற்காலம் அது.

தொலைக்காட்சி அறிமுகமற்ற அக்காலப்பகுதியில் முஸ்லிம் நிகழ்ச்சி உட்பட வர்த்தக மற்றும் தேசிய ஒலிபரப்பிலும் அடிக்கடி நாடகங்கள் ஒலிபரப்பாகின.

இந்தப் பின்னணிகளிலிருந்து ஞானம் அம்மையாரிடத்திலிருந்த சமூக ஆய்வினை அவர் தொகுத்து வெளியிட்ட அருமைக் கணவரின் நாட்டியம் நூலை எம்மால் அவதானிக்க முடிகிறது.

எஸ்.பொ. அவர்களின் சென்னை மித்ர வெளியீடாக வந்துள்ள இ. இரத்தினம் அவர்களின் நாட்டியம் நூலில் அம்மையார் இவ்வாறு எழுதுகிறார்.

இதில் இடம்பெறும் நாட்டியங்கள் பெரும்பாலும் 1960 களிலும் 1970 களிலும் எழுதப்பட்டன. ஏறத்தாழ எல்லா நாட்டியங்களும் வானொலி நிலையத்தராலோ தனிப்பட்ட கலை நிறுவனங்களாலோ மேடையேற்றப்பட்டன. கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் அதிலே நாட்டியம் சேர்க்கும் ஆவலுடன் என் கணவரை அணுகி, நாட்டியங்களுக்குப் பிரதி எழுதித் தருமாறு கோரிக்கை வைத்ததின் விளைவாகவே இவை எழுதப்பட்டன.

1950 ஆண்டு முதல் இலங்கையிலே வானொலி நன் முறையில் விரிவடைந்து சிறந்து விளங்கியது. வாரந்தோறும் தரமான வானொலி நாடகங்கள் 'சானா' எனப் புகழ் பெற்ற சண்முகநாதன் அவர்களால் தயாரித்து ஒலிபரப்பப்பட்டன. வானொலியின் இசைப் பிரிவினரால் பல இசைச் சித்திரங்கள், இசை நாடகங்கள் ஆகியன ஒலிபரப்பாகின.

(09ஆம் பக்கம் பார்க்க)

# ஆனந்தம் பொங்கவே

## ஆடிப்புதுக் கூழ் குடிப்போம்



கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

ஆடி மாதம் பிறந்துவிட்டால் அனைவரையுமே தோழர்களாக்கிக் கொண்டாடுகின்ற பாரம்பரியம் எம்மத்தியில் பன்னெடுங்காலமாக நிலவி வருகிறது.

உத்தராயணம் முடிந்து, தெட்சணாயனம் ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதத்தின் தொடக்கமேயாகும்.

காற்றின் ஆட்சியும், கலைகளின் மாட்சியும், மாற்றத்தின் சாட்சியும் மண்ணுலகில் விளைவது ஆடியில் தான்.

ஆனித்தூக்கம் கலைந்து மேனிக்கு ஆவல் தருவதும் ஆடித் தென்றலேயாகும்.

இந்நிலையில், ஆடிப்பிறப்பானது தேவர்களும் வானிலிருந்து பூவுலகிற்கு வந்திறங்கி மனித சாம்ராஜ்ஜியத்தோடு மகிழ்ந்து ஆசி கூறும் மாதத்தின் ஆரம்பமும்தான்.

ஆடிப்பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடிவெள்ளி, ஆடிப்பூரம், ஆடி பதினெட்டு, ஆடி வேல், ஆடி அமாவாசை, ஆடி விதை, ஆடிக் கூழ், ஆடிப்பெருக்கு, ஆடிக்காற்று என்றவாறு ஆடிக்கு அத்தனை சிறப்பும் உண்டு.

இத்தனை சிறப்புக்களையும் உணர்ந்த நாவலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் ஆடிப் பிறப்புக்குத் தெய்வீக வாசனை ஊட்டி, வாழ்வுக்கு ஆடி வசந்தமென ஒரு சமூகத்தையே ஒன்றுபடுமாறும், நன்று செய்யுமாறும், வெற்றி கொள்ளுமாறும் தோழமை கொண்டு அழைக்கின்றார்.

*ஆடியில் கலங்கினால்*
*ஆண்டு தோறும் அல்லலே!*

ஆடி மாதப் பிறப்பிலே எவருமே கலங்காதபடி கோடியின்பம் பெற வழிகோலியவராகச் சோமசுந்தரப்புலவர் எமக்கு நீடித்த வாழ்வு தருகின்றார். மற்றவர்களின் ஆனந்தத்தில் தாமும் மகிழ்கின்றார்.

பண்பாட்டின் உச்சமென மண் கண்ட மன்னரும் மக்களும் விண்கொண்டவர்களும் கொண்டாடுகின்ற ஒரு பண்டிகையே ஆடிப்பிறப்பாகும்.

விண்ணகத் தேவர்களோடு வான்புகுந்த பான்மையராம் சிவமயமானவர்களும், பூமியின் வாசகராம் நம்மவர்களும் ஒருங்கே சேர்ந்து ஆடிப் பாடித்தேடியின்பம் கொள்ளும் தித்திக்கும் நாளே ஆடிப் பிறப்பாகும். உலகத்தில் வாழும் அத்தனை தமிழர்களும் மனங் கொண்டு மணங்கொள்ளுமாறு பணம் அதிகம் செலவழிக்காத பாங்கான தினமாக ஆடிப் பிறப்பும் ஆடிக் கூழும் ஆடி வரமும் ஆடி வாழ்வும் கோடியின்பம் கொழிக்கிறது. தங்கத் தாத்தாவின் அற்புதமான, அதிசயமான, ஆரோக்கியமான, ஆசீர்வாதமான ஆடிப்பிறப்புப் பாடல் ஒன்றினால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு, இன்றைய நாளாகிய தமிழ் மாதப்பிறப்பன்று ஆடிப்பாடி ஆடிக் கூழினைக் குடும்பமாக ஒன்றிணைந்து குடிப்போமாக.

வெப்ப கால மிகுதியால் உடம்பில் தேங்கிய வாத நீர், கபம், பித்தம், கொழுப்புக்களை அறவே நீக்கும்படியாகக் காய்ச்சப்படும் கூழே ஆடிக்கூழாகும்.

அத்துடன், பல்லுக் கொழுக்கட்டையையும் கடித்து பலாவிலையைக் கோலிக் கூழைக் குடிக்கும்போது அடேயப்பா ஆணவம், கன்மம், மாயை மட்டுமல்ல சோம்பல், சூடு, சொரணை, கோபம், சூது, வாது, கொலை, களவு, கொரோனா ஆகிய அத்தனை அல்லாத, பொல்லாத, சொல்லாத விடயங்கள் யாவும் சொல்லாமல் கொள்ளாமல் அகன்றுவிடும். காரணம் ஆடிக் கூழினைத் தேவர்களும் பிதிர்களும் கூடவே இயற்கையும் ஆசீர்வசிப்பதனாலேயே அது சாத்தியமாகிறது.

எந்தவொரு பசளையையும் விரும்பாத கற்பக தருவாம் பனை. அதிலிருந்து பெறப்படுவது பதநீர். அப்பதநீரிலிருந்து ஆக்கப்படும் பனங்கட்டியிலிருந்து ஆடிக்கூழ் பேறாக்கப்படும் விந்தையை சோமசுந்தரப்புலவர் செய்தும் ஆக்கியும் காட்டுகின்றார்.

இலக்கண, இலக்கிய சுத்தியோடும் ஓசை, ஆசை நயத்தோடும், வாயிலே எளிதாக சொற்கள் மிளிரும்படியாகவும், பாடலே இசையைக் கொண்டு செல்லும் படியாகவும் பொதிந்த கருத்துக் கருவூலங்கள் சுவைக்கும்படியாகவும் ஆடிக் கூழைப் புலவரோ குடிக்கச் செய்கின்றார். பாடலை இதோ ஒரு முறை வாசியுங்கள். இசை தானாக உங்களை வாயை அசைத்துப் பாடச் செய்யும்.

சொல்லழகு சோபிக்கிறது அதைச் சுமந்து வரும் பாட்டழகு பலே!

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!*
*கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!*

*பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்*
*பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,*
*வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல*
*மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,*

*வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே*
*வேலூரிற் சக்கரையும் கலந்து,*
*தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி*
*சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு*

*வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி*
*வெல்லக் கலவையை உள்ளே இட்டு*
*பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே*
*பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!*

*பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி*
*போட்டு மாவுண்டை பயறுமிட்டு*
*மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்*
*மணக்க மணக்க வாயூறிடுமே*

*குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே*
*குத்து விளக்குக் கொளுத்தி வைத்து*
*அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை*
*ஆடிப் படைப்பும் படைப்போமே*

*வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே*
*வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு*
*அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி*
*வார்க்க ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே*

*வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல*
*மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்*
*கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்*
*கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே*

இம்முறை கொரோனாவின் மூர்க்கமோ எங்குமே தாக்கமதை ஏற்படுத்தியிருப்பதனால் ஆடி மாதக் கொண்டாட்டங்கள் அவரவர் வீடுகளிலேயே சிறப்பாயமைய இறைவனும் கருணை கூர்ந்துள்ளான். அடக்கமாகக் கொண்டாடுவோம்.

நவாலியிலுள்ள அவரது பழைய வீட்டு வாசலிலிருந்து இந்தப் பாடலை ஆண்டு தோறும் நான் பாடி மகிழ்வதுண்டு. அந்தவீடு இப்போது வேறொருவருக்கும் கைமாறியுள்ளது.

ஆன்மீகவாதிகளும், அரசியல்வாதிகளும், கல்விமான்களும் வாய்விட்டுப்பாட முடியாதவர்களாய் கொரோனா முகக்கவசம் (மாஸ்க்) அணிந்திருக்கின்ற தலைவிதியோடு, மனதுக்குள் பாடி மகிழுவோமாக.

தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் புலவரின் பாடலை வீட்டிலிருந்தவாறே உரத் துப்பாடினால் வானம் எமக்கு வசப்படுமே.

# ஆஸியில் இன்று 92 ...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை யாவும் ஒலி வடிவாய் அமைந்து செவிக்கு இன்பமூட்டுவனவாகவே அமைந்தன.

ஆயின், கட்புலனுக்கு விருந்தமைக்கும் வகையிலே மேடை ஏற்றப்பட்ட நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே அமைந்தன.

தமிழில் வானொலி நாடகம் முன்னேறி வளர்ந்தது போல் மேடை நாடகம் வளரவில்லை. நாடக எழுத்தாளர், தயாரிப்பாளர் பலர் இருந்த போதிலும், மேடையில் நடிக்க முன்வரும் தமிழ் நடிகைகள் மிக அரிதே. சிங்களச் சமுதாயத்திலே போலல்லாது தமிழர் சமுதாயத்திலே பெண்களுக்கு மிகுந்த கட்டுப்பாடு இருந்தது.

மேடையில் ஆண்களுடன் நடிக்க இளம்பெண்களைப் பெற்றோர் அனுமதிப்பதில்லை. வானொலி நாடகத்திலே குரல் மட்டுமே கொடுப்பதால் அதற்குப் பெரிதும் தடை இருக்கவில்லை.

காலப்போக்கிலே வானொலியின் வளர்ச்சியிலே ஆண்டுதோறும் தீபாவளி, நவராத்திரி முதலிய வைபவங்களை ஒட்டி மேடையில் நிகழ்ச்சிகளை நேயர்கள் கண்டுகளிக்க ஒரு செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்விழாக்களிலே கர்நாடக இசை நிகழ்ச்சிகள், மெல்லிசை நிகழ்ச்சிகள் ஆகிய பல இடம்பெற்றன. ஆயின் நாடகத்திற்குப் பதிலாக நடன நாடகமான நாட்டிய நிகழ்ச்சிகள் இடம்பெறலாயின. மேடை நாடகத்திலே நடிக்கத் தமிழ்ப் பெண்கள் விரும்பவில்லை. ஆயின் பரதம் பயின்று நாட்டியங்களிலே ஆடுவதைத் தமிழ்ப் பெண்களும் அவர்கள் பெற்றோரும் வரவேற்றனர்.

அக்காலத்திலே தமிழ்நாடு சென்று பரதநாட்டியம் பயின்று வந்த பெண்மணிகள் பலர் நடனப் பாடசாலைகள் நிறுவி நடனம் கற்பித்து வந்தனர். இந்நடனப் பாடசாலைகளும் ஆண்டுதோறும் விழா நடத்த விரும்பின. பரதக்கலை பயிலும் பெண்மணிகளின் தொகையும் வளரத் தொடங்கியது. எனவே, வானொலி நிலையத்தாரும் தனிப்பட்ட கலை நிறுவனங்கள் பலவும் நடத்தும் கலை விழாக்களிலே பிரதான அம்சமாக நாட்டியங்கள் இடம்பெறத் தொடங்கின.

எனது கணவர் இ. இரத்தினம் அவர்கள், 'சானா' தயாரித்த வானொலி நாடகங்கள் பலவற்றுக்கும் பிரதி எழுதிவந்தார். வானொலியின் இசைப் பிரிவினரின் அழைப்பில் பல இசைச் சித்திரங்களும், இசை நாடகங்களும் எழுதி வந்தார். இதனால் நாட்டியங்களுக்குப் பிரதி தேவைப்பட்ட போது, பலரும் அவரை அணுகினர்.

- இவ்வாறு தமது கணவரின் கலை உலகப்பணிகளை அடுத்த தலைமுறைக்கு பதிவுசெய்து வைத்தவர் ஞானம் அம்மையார்.

மகாகவி பாரதியின் காதலொருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கைகொடுத்த கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் ஞானம் அம்மையார்.

ஆஸ்திரேலியா - சிட்னிக்கு வந்த பின்னரும் அவர் எழுதினார். இங்கு யாகும் தமிழ் முரசு வாராந்த இணைய இதழிலும் பல ஆக்கங்களை எழுதியவர்.

இலங்கையில் தொலைக்காட்சியின் வருகை 1979 ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. முதலில் அதனை சுயாதீன தொலைக்காட்சி சேவை என அழைத்தனர். **(Independent Television Network - ITN)** தொடக்கத்தில் தனியாருக்குச் சொந்தமான இச்சேவை பின்னர், 1982 ஆம் ஆண்டு முதல் ரூபவாஹினி என்ற பெயரைப்பெற்று, அரச தொலைக்காட்சியானது.

அக்காலப்பகுதியில் அமைக்கப்பட்ட தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் குழுவில் **(National Television Planning Committee)** இரண்டு பெண்கள் இடம்பெற்றனர். ஒருவர் திருமதி பொன்மணி குலசிங்கம், மற்றவர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் மேலதிக பணிப்பா ளராக கடமையாற்றிய இன்று 92 வயதை அடைந்திருக்கும் ஞானம் இரத்தினம் அம்மையார்.

எமது தமிழ் சமூகத்தில் கலை, இலக்கிய, வானொலி – தொலைக்காட்சி ஊடகத்துறையில் சீரிய பணிகளை முன்னெடுத்த ஞானம் அம்மையாருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

இன்று நடக்கும் இணையவழி காணொலி அரங்கு அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிறுவனர்களில் ஒருவரும், சிட்னியில் தமிழ் கல்வியாளருமான திரு. திருநந்தகுமார் தலைமையில் இடம்பெறுகிறது.

இலங்கை வானொலி மற்றும் ரூபவாஹினி மூத்த ஊடகரும் கனடாவில் வதிபவருமான திரு. பி. விக்னேஸ்வரன், சிட்னியில் வதியும் எழுத்தாளர் பேராசிரியர் ஆசி. கந்தராஜா ஆகியோர் திருமதி ஞானம் இரத்தினம் அம்மையாரின் வாழ்வும் பணிகளும் குறித்து உரையாற்றுகின்றனர்.

எழுத்தாளரும் வானொலி ஊடகருமான கானா. பிரபா இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துள்ளார்.

# நல்லூர் கந்தன் உற்சவத்தை சிறப்பாக நிகழ்த்த சுகாதார வழிகளை தற்போதே சிந்திப்பது நல்லது

## டாக்டர் யமுனாநந்தா ஆலோசனை

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பிக்க இருப்பதால்அதனைச்சிறப்பாகநிகழ்த்தி முடிப்பதற்கு சுகாதார வழிமுறைகளைதற்போதுசிந்திப்பதுநல்லது என மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குநேற்று(வெள்ளிக்கிழமை) அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பிக்க இருப்பதால்அதனைச்சிறப்பாகநிகழ்த்தி முடிப்பதற்கு சுகாதார வழிமுறைகளைத் தற்போது சிந்திப்பது நல்லது.

சில மாதங்களுக்கு முன் நயினாதீவு வெசாக் கொண்டாட்டம் நிகழ்த்துவதற்கு முன்னேற்பாடாக சுகாதாரப் பகுதியினரால் நயினாதீவுக் கிராமத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டது.

அதே போல்நல்லூர் உற்சவத்தையும் கருதலாம். எதிர்வரும் வாரங்களில் கொரோனாத் தொற்றின் தீவிரம் குறைந்தாலும் நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச்சூழலில் வாழும் பொதுமக்களுக்கு குறிப்பாக 30 வயதுக்கு மேல் கொரோனாத் தடுப்பூசி மருந்துகளை பெற்றுக் கொடுத்தால் சிறப்பு. மேலும் ஆலய உற்சவத்தில் யாழ்.மாநகரசபைக்கு வருமானத்தைஈட்டித்தரும்சிறு வியாபாரிகளுக்கும் விசேடமாகத் தடுப்பூசியை தற்போது வழங்க முனைவது நல்லது.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் வெறுமனே மருத்துவக் கண்ணோட்டத்துடன் அல்லாது ஆன்மீக, கலாசார விழுமயங்களைப் பேணுதலும் பொருளாதார மேன்பாடு, நுண்ணிதிய விருத்தி என்பவற்றையும் கருதுதல் அவசியம்.

சமூக இடைவெளி பேணிய புதிய ஒழுங்கில் சமூகத்தை மீள இயங்க வைத்தல் மிகவும் அவசியமானது. இந்த வகையில் எதிர்வரும் நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தையும் சிறப்பாக நிகழ்த்துவதற்கு சுகாதாரப்பிரிவின் சிறந்த திட்டமிடல் அவசியமாகும்.

யாழ்குடாநாட்டுக்கு மேலும் ஒரு லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்படின் கொரோனா தொற்றின் பரம்பலைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

கொரோனா தடுப்பு மருந்துகள் கொரோனா நோயின் தீவிரத்தன்மையைக்குறைப்பதில்90சதவீதம் உறுதி உடையவையாகும். இதனால் டெல்டா திரிவின் பாதிப்பையும் கட்டுப்படுத்தலாம். எனக் குறிப்பிட்டுள்ளார்.



# மற்றுமொரு வறிய குடும்பத்துக்கு இராணுவத்தினரால் புதிய வீடு

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுதலின் கீழ் அந்தப் படைத் தலைமையகத்தின்படையினர் யாழ்ப்பாணம் சங்கரத்தை பகுதியில் வசிக்கும் மற்றுமொருவறியகுடும்பத்துக்கான வீட்டை நிர்மாணிப்பதற்காக தங்களது தொழில்நுட்ப நிபுணத்துவம், பொறியியல் மற்றும்மனிதவளஉதவிகளை வழங்கினர்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க குமார் வீரசூரிய என்பவரின் உதவியுடன் ராசதுரை அமுதப்பிரியா என்பவரின் குடும்பத்துக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது.

11 ஆவது இலங்கை இலேசாயுத காலாட் படையினரால் கட்டுமானப் பணிகளுக்கு அவசியமான மனிதவளஉதவிகள் வழங்கப்பட்டமையுடன் 51 ஆவது படைப்பிரிவின் 513 ஆவது பிரிகேட் தளபதியின் மேற்பார்வையில் சில வாரங்களில் படையினரால் இந்த பணி நிறைவு செய்யப்பட்டது.

நிர்மாணிக்கப்பட்ட வீட்டை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வின்போது யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகதளபதிமேஜர்ஜெனரல்பிரியந்த பெரேரா கலந்து வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

அதே நேரம், பயனாளிகளுக்கு அவசியமான உலர் நிவாரணப் பொதிகள் மற்றும் குடும்பத்துக்கும் வீட்டுக்கும் தேவையான அத்தியாவசிய பொருள்கள் அத்துடன் குடும்பத்தின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான கற்றல் உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

# பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து முதற்கட்ட இழப்பீடு

தீப்பற்றி அனர்த்தத்திற்கு உள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடம் இருந்து முதற்கட்ட இழப்பீடாக கிடைத்துள்ள நிதி பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடாக வழங்குவதற்கு போதுமானதாக இல்லை என்று கடலோரப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் அதிகபட்ச இழப்பீட்டு ஒன்றை பெற்றுக் கொள்வதற்குத் தேவையானநடவடிக்கைகள்தற்போது எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சில் கடந்த 14 ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு ஆரம்ப இழப்பீடாக 2 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்துமாறுஅரசாங்கம்குறித்தநிறுவனத்திடம் கோரியிருந்தது. ஆனால் இதுவரை 36 லட்சம் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே கிடைத்துள்ளன.

அத்துடன், இதில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு பத்து லட்சம் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதேவேளை, இழப்பீடு வழங்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடலோரப் பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் மொஹான் டி சில்வா மேலும் தெரிவித்தார்.

# மன்னார் சிற்றாலயங்கள் மீதான தாக்குதல்; விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து



மன்னார்மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக ஆலயம்மற்றும்சிற்றாலய சொரூ பங்கள் மீது மேற்கொள்ளப் பட்டு வந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இன்று (சனிக்கிழமை) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மன்னார்மாவட்டத்தில் கத்தோலிக்கமக்களின்வணக்கத்திற்குரிய சொரூபங்கள், சிற்றாலயங்கள் இனம் தெரியாத நபர்களால் இடிப்பது மற்றும் அடித்து சேதப்படுத்தும் சம்பவங்களை அவதானித்து வருகின்றேன்.

இத்தகையசெயல்கண்டிக்கத்தக்கது. மன்னார் மாவட்டத்தில் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழும் கத்தோலிக்க மக்களுக்கும், இந்து மக்களுக்கும் இடையே பகைமையை ஏற்படுத்தும் செயலாக நான் இதைக் கருதுகின்றேன்.

குறித்த செயற்பாடு அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு எதிரான நபர்களின் செயல் என்பதை நான் நன்கு அறிகின்றேன்.

எனவே பொலிஸார் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அத்துடன் விரைவாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அத்தகைய நபர்கள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன்கொண்டு வந்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இனி மேல் இது போன்ற சம்பவங்கள் தொடர அனுமதிக்கக் கூடாது. துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சிற்றாலயங்கள் மீதான தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். – என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயிற்றப்பட்ட இளைஞர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பும் முதல்கட்டம் ஆரம்பம்

*25 ஆயிரம் பயிற்றுவிக்கப்பட்ட தொழில் துறைகளைச் சார்ந்த இலங்கை இளைஞர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பும் முதல் கட்ட நடவடிக்கை ஆரம்பமானது.*

*அதன்படி, முதல்கட்டத்தின்கீழ், ருமேனியாவில் பணிபுரிய200 பேருக்கு அவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமித விக்ரமசிங்க தெரிவித்தார்.*

*மேலும், எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக மாதத்துக்கு 2,000 முதல் 2,500 பேரை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.*

*அத்துடன், பயிற்சியற்ற ஊழியரை வெளிநாட்டு வேலைக்காக அனுப்புவதன் மூலம் நாட்டிற்கு கிடைக்கின்ற அந்நியச் செலாவணியை விட, ஒரு திறமையான தொழிலாளியை வெளிநாட்டு வேலைக்காக அனுப்பி அதன் மூலம் நான்கு மடங்குகள் அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமித்த விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.*

# விவசாய நிலத்தில் விழுந்து கிடந்த யானைக்கு முல்லையில் சிகிச்சையளிப்பு

முல்லைத்தீவில்உடல்நிலைபாதிக்கப்பட்ட யானை ஒன்றுக்கு சிகிச்சை அளிக்கும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக் களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஒதியமலை பெரியகுளம் கிராமத்தில் காட்டு யானை ஒன்று உயிருக்காகப் போராடி வருகின்றது.

தொடர்ச்சியாக குறித்த பகுதி விவசாயிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்த யானை விவசாயிகளின் நிலத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில் கிராம விவசாயிகளால் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிக்குச் சென்ற வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் விவசாயிகளின் நிலத்தில் வீழ்ந்து கிடந்த காட்டு யானைக்கு சிகிச்சை அளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2021இல் வெளியிடப்பெற்றது.